**ஒருவருக்கொருவர் பக்திவிருத்தி உண்டாக்குங்கள்**

**வாசிக்க**: **ரோமர்** 14:16-19 15:2

பக்திவிருத்தி என்றால் விசுவாசத்தில் உறுதியாகப் பெலனடையச் செய்தல் என்று அர்த்தமாகும். நாம் ஒருவருக்கொருவர் விசுவாசத்தில் உறுதியாக பெலனடைய உதவியாக இருக்க வேண்டும்.

எவையெல்லாம் பக்திவிருத்தியாகும்?

நாம் சீடராவதிலும், மற்றவர்களை சீடராக்குவதிலும் வளர்வதும் பிறர் வளர உதவிசெய்வதும் பக்திவிருத்தியாகும். இயேசுவைப்போல மாறுவதிலும், பிறரை இயேசுவைப்போல மாற உதவி செய்வது பக்திவிருத்தியாகும். தேவனுக்கேற்றவிதமாய் சிந்திப்பதிலும், பேசுவதிலும், செயல்படுவதிலும் நாம் வளர்வதும் பிறர் வளர உதவிசெய்வதும் பக்திவிருத்தியாகும். தான் கற்று நிச்சயித்தவைகளில் உறுதியாயிருந்து வாழ்ந்துகாட்டி, மற்றவர்களுக்கும் கற்றுக்கொடுத்து வளர உதவி செய்வது பக்திவிருத்தியாகும். மாம்சத்தின் ஆசை இச்சைகளின்படி வாழாமல் ஆவிக்கேற்றபடி வாழ்வதும் அப்படிப்பட்ட பாதையில் மற்றவர்களை வழிநடத்துவதும் பக்திவிருத்தியாகும்.

பக்திவிருத்தியை உண்டாக்குவது எப்படி?

நம்மால் முடிந்த அளவு பிறருக்கு நன்மை செய்து வாழ்வதின் மூலம். ரோமர் 15:2, 1கொரிந்தியர் 10:24. ஆண்டவரைப்போல் உண்மையான அன்பு காட்டுவதின் மூலம். 1கொரிந்தியர் 8:1, எபேசியர் 4:16. முன்மாதிரியாக வாழ்ந்து காட்டுவதின் மூலம். 1கொரிந்தியர் 10:23. தேவன் நமக்கு கொடுக்கிற ஆவியின் வரங்களை பயன்படுத்துவதின் மூலம். 1கொரிந்தியர் 14:4,12. விசுவாசத்தை செயலில் வெளிப்படுத்துவதின் மூலம். 1தீமோத்தேயு 1:3. தான தர்மங்கள் செய்வதின் மூலம்.

யாக்கோபு 1:26,27 எபிரெயர் 13:16 போன்ற காரியங்கள் மூலம் நம்முடைய வாழ்விலும் பிறருடைய வாழ்விலும் பக்திவிருத்தியை உண்டாக்க முடியும்.

**கேள்வி**:

1. பக்திவிருத்தி என்றால் என்ன?

2. உங்களுடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்காக நீங்கள் தினமும் என்ன செய்கிறீர்கள்?

3. நீங்கள் வளரவேண்டிய ஆவிக்குரிய காரியங்கள் (செயல்கள்) என்னென்ன?